## அமெரிக்கா

எப்போதும்
யாரோ ஒருவர்
அமெரிக்காவாக
மற்றவர்
அமெரிக்கா அல்லாதவராக

ஒருவர்
அமெரிக்கா ஆனவர் என்றால்
மற்றவரெல்லாம்
அமெரிக்கா ஆக முடியாதவர்கள்

கொஞ்சம் கடினமானதுதான்
யாவரும் அமெரிக்கா ஆகும்
கனவு

இதில் முக்கியமானது
என்னவென்றால்

நீங்கள் அமெரிக்கா ஆவது
அல்ல

மற்றவர் அமெரிக்கா ஆகிவிடாமல்
பார்த்துக்கொள்வதுதான்

அமைப்பியல் ரீதியாக
அமெரிக்கா ஒன்றுதான்
—அவரவர் அளவிலான அமெரிக்கா

எனவே
அணையாமல் வைத்திருங்கள்
உங்களுக்குள்ளிருக்கும் அமெரிக்காவை

*15.07.04*

## அணில்

இடைவிடாத அணிலின் குரல்

தோட்டம் அணிலாக இருந்தது
அணிலைப் பார்க்கும்வரை

*07.06.05*

ஒரு எளிய கோடு வளைந்து
உருப்பெற்றது ஒரு முட்டை
சட்டென்று கோட்டை அழித்துவிட்டு
அதிலிருந்து பறந்துசெல்கிறது
முன்னெப்போதும் பறந்திராத
ஒரு பறவை

*27.01.04*

குழந்தையின் ஒரு கை
உங்களைப் பிடித்திருக்க
மறுகை நீள்கிறது

புல்வெளிகளை நோக்கி…
பலமாடிக் கட்டடங்களை நோக்கி…
எருமை மாடுகளை நோக்கி…
நீருற்றுகளை நோக்கி…
எறும்புகளை நோக்கி…
வேகமாகச் செல்லும் வாகனங்களை நோக்கி…
பைத்தியங்களை நோக்கி…
கடல் அலைகளை நோக்கி…
ஆகாயம் நோக்கி…
நட்சத்திரங்கள் நோக்கி…

நமக்கும்
இப்பிரபஞ்சத்திற்கும் இடையே
ஒரு குழந்தை இருப்பதான எண்ணம்
சட்டென்று புலப்பட்டதும்
நின்றுவிடுகிறீர்கள் திகைத்து
அப்படியே…

ஒவ்வொன்றாய்
வியப்புகளை அறிமுகப்படுத்தியபடியே
இழுத்துச்செல்கிறது குழந்தை
மேலும்

விண்ணகத்துச் செய்திகள்
காட்சிகளின் துடிப்புகள்
வியப்பின் மெல்லதிர்வுகள்

இவ்வுலகை உணர்கிறீர்கள்
ஒரு சிறுவிரலின்
மெல்லிய துடிப்பால்

***09.10.05***

மேம்பாலத்தினடியில்
நிறுத்திவிட்டுப் போயிருக்கிறாய்
உன் மோட்டார்சைக்கிளை

குளிர்பானமருந்திவிட்டுத் திரும்பும்போது
நீ காண்கிறாய்
சிக்னலில் பிச்சையெடுக்கும் சிறுமி
உன் வாகனத்தில்
ஏறி உட்கார்ந்து
கைப்பிடியை அங்குமிங்கும் திருப்பி
சிக்னலில் அவள் கண்ட வாகனங்களின்
ஒலியையெல்லாம்
எழுப்பிக்கொண்டிருப்பதை

நீ அருகில் வரும்போது
ஒரு கணம் தயங்குகிறாய்
உன்னைக் கண்டு
இறங்கி ஓடுகிறாள்
சிறுமி

வண்டியில் ஏறி உட்கார்ந்து
அதைக் கிளப்புமுன்
சட்டென்று தோன்றுகிறது உனக்கு
அந்தச் சிறுமிபோல்
அவ்வளவு உரிமையுடன்
சுதந்திரத்துடன்
உன் வண்டியில்
எப்போதாவது உட்கார்ந்திருக்கிறோமா
என்று

***19.05.06***